Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 6. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 25-5-1946 வைகாசிமீ 12௳ { மலர் 33

# மதுரையில் நடந்ததென்ன?

## கும்பகோணத்தில் பெரியார் ஈ. வெ. ரா. பேசியது.

16-5-46ல் மதுரை கறுப்புச்சட்டைப் படை மாநாட்டின்போது பார்ப்பனர்களும் காங்கரஸ்காரர்களும் சதியாலோசனை செய்து 12-5-46ந் தேதி மதுரையில் நடத்தின காலித்தனங்களைப்பற்றி காங்கரஸ் பத்திரிகைகள் ஒரே கட்டுப்பாடாக உண்மைகளை மறைத்து வேண்டுமென்றே பல பொய்களைக் கற்பித்து காலித்தனங்களை ஆதரிக்கும் முறையிலும் கறுப்புச்சட்டைப்படையினரை பொதுமக்கள் வெறுக்கவேண்டுமென்ற தன்மையிலும் வெளிவந்த பல செய்திகள் என் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதில் அசோசியேடட் பிரஸ் சேதியும் மேற்கண்ட காரியங்களுக்கு உதவிபுரியும் தன்மையிலே இருந்ததையும் பார்த்தேன். இவ்வளவும் போதாமல், டில்லி ரேடியோவும், நமது மாகாண ரேடியோக்களும் பார்ப்பனச் சேதிகளை பரப்பியதையும் கேள்விப்பட்டேன். அதன் பிறகு மதுரை சம்பவம் விஷயமாய் கறுப்புச்சட்டைப்படை மாநாட்டுத் தலைவர் என்ற முறையிலும், திராவிட கழகத் தலைவன் என்ற முறையிலும் ஒரு அறிக்கை விட்டிருக்கிறேன். முழு விபரங்களும் சரியானபடி தெரியவேண்டுமென்று கருதி அவைகளைத் தெரிந்த பின்பும், இங்கே பேசுகிறேன்.

என் அறிக்கையை இன்றைய காங்கரஸ் பத்திரிகைகள் சரியானபடி பிரசுரிக்காதென்றும், ரேடியோக்கள் ஒலிபரப்பாதென்றும் எனக்குத் தெரியுமானாலும் நம்மவர்கட்கு அந்தச்சேதிகளை நாம்மறுக்கிறோம் என்பதாவது தெரியட்டும் என்பதற்காக பல பத்திரிகைகளுக்கும், அசோசியேட் பிரசுக்கும் ஒரு விவரமான அறிக்கை விட்டேன். லிபரேட்டர் தவிர வேறு எந்தப் பத்திரிக்கையும் சரியாகப் பிரசுரிக்கவில்லை.

மதுரை கறுஞ்சட்டைப்படை மாகாண மாநாடு 11ந் தேதி காலையில் மதுரை இரயில்வே ஸ்டேஷனிலிருந்து தலைவர்கள் ஊர்வலம் துவங்கிற்று. அந்த ஊர்வலம் சுமார் 5000 கறுப்புச் சட்டைப்படை தொண்டர்களோடு 50000 மக்கள் புடைசூழ வாத்திய கோஷங்களுடன் ஆறு மைல் தூரம் மதுரை நகரம் சுற்றி சுமார் 11மணிக்குமேல் ஷெனாய் நகரைச் சேர்ந்த வைகையாற்றில் அமைக்கப்பட்டிருந்த தியாகராய நகர்—நாகம்மையார் என்ற பந்தலை அணுகிற்று. ஊர்வலத்தில் கோஷங்கள் வானைப்பிளந்தது என்றாலும், கோஷங்களில் இயக்கத் தலைவர்களுக்கு வாழ்த்தும் கழகக்கொள்கைகள் சிலவற்றைச் சொல்லி அவற்றிற்கு வெற்றியும் தவிர பார்ப்பனர், காங்கரஸ் ஆகியவைகளைப்பற்றியோ மற்றும் "அழிக" "ஒழிக" என்கின்ற மொழிகள் கொண்ட எவ்வித கோஷமுமோ யாரும் செய்யக்கூடாது என்று கண்டிப்பான திட்டம்செய்து அம்மாதிரியான கூச்சல் எதும் இல்லாமலே வெற்றிகரமாக ஊர்வலம் நடந்தேறியது குறிப்பிடத்தக்கது. மாநாடு துவங்கி முறையே பாட்டு, கொடியேற்றுதல், திறப்புவிழா, தலைவர் உரை முறைகளும் மிக்க அமைதியுடனும், உற்சாகத்துடனும் நடைபெற்றது. எனது தலைமைஉரையில் கறுப்புச் சட்டைப்படை கொள்கைகளைப்பற்றி பின்னால் முடிவுரையில் விளக்குவதாகச் சொல்லிவிட்டு முகவுரையில் பெரிதும் படையினரும், தொண்டர்களும் அடக்கமாகவும், ஒழுக்கமாகவும், நம்மியக்கத்தினர் அல்லாதவர்கள் இயக்கக்கொள்கைகளில் மாறுபாடுடையவர்கள் நம்மிடம் அனுதாபம்காட்டும் முறையிலும் நடந்துகொள்ளவேண்டும் என்றும், எவர் மனமும் புண்படும்படியான எந்தக்காரியத்தையும் செய்யக்கூடாதென்றும், குறிப்பாக பேசுவதிலும், ஒலி ஒலிப்பதிலும், மற்றவர்களை வசியப்படுத்தும் முறையில் இருக்கவேண்டுமே தவிர நம்மீது வெறுப்பு ஏற்படும்படி இருக்கக்கூடாதென்றும், மிக்க தெளிவாகவும், கண்டிப்பாகவும் நமது சில இயக்கப் பிரமுகர்கள் பிரசாரகர்கள் என்பவர்கள் மனதிலும் தைக்கும்படியாகவும் பேசிவிட்டு, என் பேச்சுமுடிவில் நான் அதிகமாக, நாம் நடந்துகொள்ளவேண்டியவைகளைப்பேசியதற்கும், அவர்களை மிரட்டியதற்கும் மன்னிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்திருக்கிறேன். மற்றும் குறிப்பாக காங்கரஸ் கம்யூனிஸ்டு இயக்கங்களில் இருந்துவரும் பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்துவரும் சகுனம்-இப்போது தெரிவதனால் காங்கரஸ் கம்யூனிஸ்ட்டுகளுடைய நட்புப்பெறவும் முயற்சிக்கவேண்டும் என்றும் பேசி இருக்கிறேன். இந்தப் பேச்சுக்கள் பத்திரிகைநிருபர்கள் பதிந்துகொண்டதையும் பார்த்தேன். C.I.D. ரிப்போர்ட்டர் மிக்க கவனமாக குறித்தவைகளையும் பார்த்தேன்.

அடுத்தாற்போல் இரவு நடக்கப்போகும் நாடகமும் மிக்க அடக்கமான தன்மையிலும் நடைபெறவேண்டும் என்றும் திட்டம் செய்தேன். இவ்வளவு நான் ஜாக்கிரதையாக இருந்தும் தொண்டர்களும் ஒழுங்காக நடந்தும் மதுரையிலுள்ள சில பார்ப்பனத் தோழர்கள் இதைப்பற்றியெல்லாம் கவனியாமல் ஊர்வல ஒழுங்கையும் பெரும் கூட்டத்தையும், ஊர்வலத்தில் கோச்சுவண்டியில் இருந்த தலைவர்களை சௌராஷ்டிரர்கள் சில பார்ப்பனர்கள் உள்பட அவரவர்கள் வீட்டில் இருந்தபடி வணங்கினதும் மரியாதை செலுத்தினதும்பற்றிய பொறாமையையே பிரதானமாகக் கொண்டு இதற்கு எப்படியாவது ஒரு காரியம்செய்து மக்களிடத்தில் இவர்களுக்கு வெறுப்பு உண்டாக்கவேண்டிய முறையில் சதிசெய்யவேண்டிய அவசியத்துக்கு வந்துவிட்டார்கள். அதில் மதுரை வக்கீல் தோழர் வைத்தியநாத அய்யர் என்பவர் இரண்டுவிதத்தில் முக்கியராகி அட்டூழியத்தை அவசியமாக்கிவிட்டார் என்று தெரிகிறது. அவையாவன:- ஒன்று மதுரையில் பொதுவாக இருந்துவரும் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கிற பேத உணர்ச்சி 2. தோழர் வைத்தியநாத அய்யர் ஆச்சாரியார் கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் அவருக்கு மதுரையில் மதிப்பு இல்லாமல் போனதோடு, அவர்பேரில் மதுரை காங்கரஸ் பார்ப்பனரல்லாதாருக்குவெறுப்பு அதிகமாய் இருந்ததும் அவருக்கு அங்கு மேடையே இல்லாமல் இருப்பதும், வீதியில் நடக்கக்கூட போதிய தாராளம் இல்லாமல் இருந்ததுமாகும். இந்த இரண்டு காரியத்துக்கும் பரிகாரம் தேடவேண்டிய முறையில் மதுரை அட்டூழியத்திற்கு அவர் பிறப்பிடக்காரராக ஆகவேண்டியவராகிவிட்டார். அதனாலேயே இந்த அட்டூழியத்திற்கு வழி சொல்லிக் கொடுக்கவும், துவக்கப்படுவதற்கு செலவு கொடுக்கவும், இவர்பேரில் வெறுப்புள்ள காங்கரஸ் தலைவர்களைக்கண்டு நேசம் பேசவும் முனைந்தார் என்று தெரியவருகிறது.

(தொடரும்)

---

## மேற்கு சென்னை திராவிடர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது

எதிர்பாராது ஏற்பட்ட சில கலேட்சிநேர சம்பவங்களினால் மேற்படி மாநாடு 26-5-46லிருந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மாநாட்டுக் காரியதரிசிகள்.

---

அமைந்தகரை திராவிடர் கழகச் சார்பில் ஜுன்மாதத்தில் லட்சுமி தியேட்டரில் ஓர் மாநாடு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

குடி அரசு

1946௵ மே௴ 25௳

# புது (பணக்கார) மந்திரி கல்வி திட்டம்

சென்னை அரசாங்க கல்வி மந்திரி 4000 ஆசிரியர்களை தயார் செய்ய திட்டம் போட்டிருக்கிறார். அத்திட்டம் அவசரத்திற்கு உதவாது, காரியத்துக்கும் ஆகாது, போதுமானதாகவும் இருக்காது. உபாத்தியாயர்கள் தின்றுவிட்டுப் போகத்தான் பெரிதும் உதவும்.

நமது தற்கால கல்வித்திட்டம்: உடனே விளம்பரம் செய்து 3வது பாரம் அல்லது 8வது வகுப்பு வரை படித்த ஆண் பெண் இரு பாலர்களையும் அழைத்து ஒரு பிரவேச பரீட்சை, அதாவது 4வது வகுப்புவரை சொல்லிக்கொடுக்கப் போதிய எழுத்து, படிப்பு, கணக்கு ஆகியவைகளை சோதித்துவைத்து அந்தந்த கிராம சுற்று வட்டாரத்திலிருந்து வருகிறவர்களை தேர்ந்தெடுத்து 50 அல்லது 100பேருக்கு ஆளுக்கு மாதம் ரூ. 10 செலவில் அந்தந்த வட்டாரத்திலேயே 3மாதம் சாப்பாடு போட்டு பயிற்சி கொடுத்து, பெரிதும் பெண்கள் உபாத்தினிகளையே, அல்லது கணவன், மனைவிகளையே ஆளுக்கு மாதம் ரூ. 15 வீதம் சம்பளம், (அல்லது ரூ. 17-8-0 சம்பளம் இப்போதைக்கு) கொடுத்து அந்தந்த கிராம சாவடிகளில் அல்லது சுருக்கமான செலவில் போட்ட சாளை கொட்டகையில் பள்ளிக்கூடம் துவக்கிவிடவேண்டும். இந்த வாத்தியாயர்களுக்கு கண்ட்ரோல் விலைக்கு சாமான்கள் கிடைக்கும்படி செய்யவேண்டும். எல்லா பிள்ளைகளையும் கொண்டுவந்து சேர்க்கும் வேலை முதலில் பட்டா மணியகாரரிடம் விடவேண்டும். மாதம் 25 ரூபாய் சம்பளத்தில் மாதம் 50 முதல் 100 பள்ளிக்கூடம்வரை கவனிக்கவும், தனிக்கை செய்யும் சைக்கிள் இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் சென்சஸ்படி பிள்ளைகள் சேர்க்கப்பட்டனவா? என்று பார்க்கவேண்டும் இந்தவேலைகள் கல்வி இலாக்காவுக்கு சம்பந்தமிருக்கக்கூடாது, ரிவினியூ இலாகா டிப்டி தாசில்தார் for எடுகேஷன் என்பவர்கீழ் இருக்க வேண்டும்.

சர்வகலாசாலை, காலேஜுகள், ஐஸ்கூல்கள் ஆகியவைகளுக்கு கொடுக்கும் கிராண்டுகளை சரி பகுதியாக உடனே குறைத்துவிட வேண்டும். இப்போது ஐஸ்கூல்கள் லாபத்தில் நடக்கிறது, காலேஜுகள் கொழுத்த சம்பளம் வாங்க பயன்படுகிறது. வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி பிள்ளைகள் உபாத்தியாயர்கள் உள்ள பள்ளிகளுக்குத்தான் மேல்படி பகுதி கிராண்டும் கொடுக்கப்படவேண்டும் என்றும் இருக்கவேண்டும். காலேஜ் ஹைஸ்கூல் ஆகியவை பார்ப்பனருக்கும், பணக்காரருக்கும் தான் பயன்படுகின்றன. பாட்டாளி, விவசாயி, கூலிக்காரர்கள் பிள்ளைகளுக்கு இதனால் பலன் இல்லை. சட்டக் கல்லூரியையும் வேறுசில தனிப்படிப்பு கல்லூரிகளையும் 5 அல்லது 10-வருடம் மூடி வைக்கலாம். இது 5வருட திட்டமாக வைக்கலாம். அடுத்த 5வருட கட்டாயப்படிப்பும், கட்டாயத் தொழில்படிப்பும் வைக்கலாம்.

இதற்கு பொருளுக்கு விவசாய வருமானவரியும், மற்றும் ரூபாய்க்கு இவ்வளவு என்று கல்வி வரியும், போடலாம். அல்லது ஜமீன்தார் முறைகளை ஒழித்து அந்த வரும்படி எடுத்து பயன்படுத்தலாம். அல்லது ரயில் கட்டணத்தை உயர்த்தலாம். அல்லது நூல் நெசவு யந்திரங்களை கைப்பற்றி பவுண்டுக்கு இவ்வளவு, கஜத்திற்கு இவ்வளவு என்று வரிபோட்டு உபயோகிக்கலாம். அல்லது சாவுவரி, செத்தவர்கள் சொத்தில் 100க்கு 10 வீதத்துக்கு அதிகப்படாமல் வரி வசூலித்து பயன் படுத்தலாம்.

சில உபாத்தியாயர்கள் யோக்கியதை, சில கட்டடத்தின் உயர்தன்மை, சில பிள்ளைகள் மாத்திரம் படித்தல் ஆகியவற்றைவிட அதிக உபாத்தியாயர், அதிகபள்ளிக்கூடம் அதிகப்பிள்ளைகள் கல்விபெறுதல் ஆகியவை ஏற்படுவதை கவனிக்க வேண்டும். ஏனெனில் கிராமங்களில் ஏழைகள் பற்றியும், அடியோடு படிப்புக்கு வசதி இல்லாதவர்கள் பற்றியும், மாதம் ரூ. 15 வரும்படிக்கும் 8வது படித்தவர்கள் ஆண், பெண்கள் திண்டாடுவது பற்றியும் செய்யப்படும் திட்டம் இது ஆனதால் நகர செல்வவான் மக்களுக்கு போடும்படியான திட்டம் ஆசிரியப்பிரபுக்களுக்குப் போடும் ஐரோப்பிய நாட்டுத் திட்டம் இதற்கு வேண்டியதில்லை.

இதுதான் நமது இப்போதைய கிராம மக்கள் தற்குறித்தன்மையை ஒழிக்கும் கல்வித் திட்டம் எனப்படுவதாகும். இதை கல்வி மந்திரி கவனிப்பாரா? கவனிக்க பார்ப்பனர்கள் விடுவார்களா? இவர் தற்குறிகளின் பிரதிநிதியா? பார்ப்போம்.

## சட்டமந்திரி

☆

சட்டமந்திரி பதவிக்கு வந்து 25-நாள் ஆகி இனியும் "அரசியல் கைதிகள்" விடுதலைப்பற்றிய யோசனை தானா?

"தலைவாணர் கைதிகள்" பற்றி கவனிக்க நேரமே இல்லையா? மக்களின் ஏகோபித்த கூக்குரலுக்கு மதிப்பில்லையா? இதுதானா ஜனநாயகம்?

---

# காந்தியாருக்கு ஞானம்

அஹிம்சையும் கதரும் காங்கரசின் திட்டங்களில் ஒன்றாக இருக்கவேண்டியதில்லை என்பதாகச் சொல்ல காந்தியாருக்கு இப்போதுதான் ஞானம் உதயமாயிருக்கிறது. இது இரண்டும் அனுபவத்திற்கு ஏற்றதல்ல என்றும், மக்களை ஏய்க்கத்தான் பயன்படும் என்றும் அப்போதே சுமார் 30 வருடத்துக்கு முன்பே நாம் சொன்னோம். இதுவரை காங்கரசாரும் அப்போது நாம் சொன்னபடியே நடந்துவந்தார்கள். ஆனால் காந்தியார் 19-5-46ல்தான் "அரிஜன்" என்ற பத்திரிகையில் மேற்கண்டபடி கதர், அஹிம்சை என்ற நிபந்தனையை எடுத்துவிடவேண்டும் என்பதாக எழுதுவதோடு நாம் உண்மையாகவும், யோக்கியமாகவும் நடப்பதானால் "நீதியும், சமாதானமுமான" என்கின்ற வார்த்தைகளையும் காங்கரஸ் கொள்கைகளில் இருந்து எடுத்துவிடவேண்டும் என்பதாகவும் குறிப்பு காட்டுகிறார்.

இந்த ஞானமும், அவசரமும் காந்தியாருக்கு இப்போது ஏற்பட்டதற்கு காரணம் சென்னை மந்திரிசபை அமைப்பும், மதுரைக் காங்கரஸ்காரர் திருவிளையாடல்களுமாக இருக்கலாம்.

மற்றபடி வேறு என்னமாய் இருக்கமுடியும்?

---

# குடந்தை மாநாடுகள்

குடந்தையில் இரு பெரிய மாநாடுகள் அதாவது, ஜில்லா திராவிட கழக மாநாடு, சுயமரியாதை மாநாடு நடந்தன. தோழர்கள் சின்னத்தம்பி, நீலமேகம், பொன்னுசாமி (சேர்வை) முதலியவர்கள் நடத்தும் காரியம் எதுவானாலும் அது தமிழ்நாட்டில் நடக்கும் வேறு எந்தக் காரியங்களையும் விட சிறந்ததாகவே இருக்கும் அல்லவா?

னவே அதற்கு இணங்கவே
பகோணம் மாநாடுகள் நடந்
ஏராளமான கூட்டம்,
மையான பேச்சுக்கள், அற்
ான சாப்பாடு, அதிசயமான
புகளுடன் அதிர்ச்சிகாணும்
ான உணர்ச்சி ததும்பியவண்
மாநாடுகள் நடைபெற்றன.
ரை அட்டூழியத்திற்கு அப்
உடனே நடந்த மாநாடுக
ளானதால் இது ஜில்லா மாநா
டாக இருந்தாலும், ஆண்களும்
பெண்களும் தாங்கள் மதுரை
பாதகச் செயலால் சிறிதும் மனம்
தளர்ந்துவிடவில்லை என்பதைக்
காட்டுமுகத்தான் முன்னிலும்
அதிகமாக அதி துணிவோடு ஏராள
மானமக்கள் வந்திருந்தது குறிப்
பிடத்தக்கதாகும்.

ஆனால் ஒரு குறை அதாவது மதுரைக்குப்பின் சில தோழர்கள் கறுப்புச்சட்டையைக் கழற்றி மூலையில் போட்டுவிட்டார்கள் என்பதாகக் காணப்பட்டது. கறுப்புச்சட்டை அணியாதிருப்பதை பெருமை என்று சிலர் கருத ஆரம்பித்துவிட்டார்கள். இதைக் கண்டதும் பெரியாருக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது.

மதுரைக்குப்பின்னும் கறுப்புச் சட்டை அணியாமல் கூட்டத்திற்கும், சிறப்பாக மேடைக்கும் வரத் துணிகிறவர்கள் குள்ளநரிகள் என்றும், இந்த குள்ளநரிகளும் திருந்தினால்தான் அல்லது அவர்களைவிட்டு நாம் மாறினால்தான் நாணயமான, வீரமான காரியம் ஏதாவது செய்யமுடியும் என்றும் ஆத்திரமாகப் பேசினார். ஏனெனில் மதுரையில் அடி, உதைபட்டு மனம் நொந்த தோழர்களை, தாய்மார்களை இவர்கள் (கறுப்புச் சட்டை அணியாதவர்கள்) ஏளனம் செய்ததாகவே கருதிப் பேசினார்.

என்னசெய்வது? மனதில்வைத்து புளுங்குவதைவிட வெளியில் சொல்லி அழலாம் என்றே கருதி ஆத்திரத்தைக் கொட்டிவிட்டார் போல் தோன்றிற்று.

கறுப்புச்சட்டைப்படையை கலைத்துவிடுவது அல்லது கூட்டத்துக்கு குறிப்பாக மேடைக்கு வரும் இயக்கப் பிரமுகர்கள் கறுப்புச்சட்டைக்கு மரியாதை செய்யும் தன்மையாக கறுப்புச் சட்டை அணிந்துவருவது என்கின்ற இரண்டிலொன்றை நிர்ணயப்படுத்தவேண்டிவரலாம் என்று கூட தனக்குப் படுவதாகப் பேசினார். ஏனெனில் பலதடவை கேட்டுக்கொண்டும் பலர் கவனிக்கவில்லை. இதனால் இயக்கத்தை மதிக்கிறவர்கள் யார்? தன்னை மதிக்கிறவர்கள் யார்? என்பதும் மற்றும் பலதும் தெரிய சௌகரியம் உண்டாகலாம். ஆகவே பெரியாரை அழைக்கும் கூட்டத்தினரும், மாநாட்டினருமாவது இதை இனி கவனித்தால் நலமாக இருக்கும். ஆகவே கும்பகோணம் மாநாடுகள் உண்மையில் மற்ற மாநாடுகளைவிட ஒரு பெருமையான, பிரபலமான மாநாடு என்றும், மிகவும் ஒழுங்காக கட்டுப்பாடாக நடந்த மாநாடு என்றும் சொல்லலாம்.

---

# விடுதலை! விடுதலை!!

## திராவிடர் தமிழ் தினசரி

ஜூன் முதல் தேதி முதல் மீண்டும் வெளியாகும்.

**சந்தா விவரம்.**

| | | |
|---|---|---|
| ஆண்டு 1க்கு | ரூ. | 15-0-0 |
| 6-மாதத்திற்கு | ரூ. | 8-0-0 |
| 3-மாதத்திற்கு | ரூ. | 4-4-0 |
| 1-மாதத்திற்கு | ரூ. | 1-8-0 |
| தனிப்பிரதி விலை | ரூ. | 0-0-9 |

**திராவிடத் தோழர்களே**

ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்கள் உடனே சந்தாதார்களைச் சேர்த்தனுப்ப வேண்டுகிறோம்; ஒவ்வொரு கழகமும் ஒரு பிரதியாவது வாங்கவேண்டுவதோடு தனிப்பட்ட தோழர்களும் ஆதரிக்கவேண்டுகிறோம்.

ஏஜன்சி எடுக்க விரும்புவோர் பிரதி1க்கு ரூ. 1-4-0 வீதம் தேவையான பிரதிகளுக்கு டிபாசிட் முன்பணம் அனுப்பவேண்டும். இப்போதைக்கு ஏஜண்டுகளுக்கு பிரதி 1க்கு 3பை வீதம்கழிவு தரப்படும். பிற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விளம்பரம் அனுப்புவோர் விரைவில் அனுப்புக.

மானேஜர், "விடுதலை"
2, பாலகிருஷ்ணபிள்ளை தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

---

## வருந்துகிறோம்

ஈரோடு பிரபல வியாபாரியும் முக்கியமான பொதுநல சேவைக்காரரும் மகாஜன ஹைஸ்கூல் காரியதரிசியும், அர்பன் பாங்கு பிரசிடெண்டுமான தோழர் எம். சிக்கய்ய நாயக்கர் அவர்களின் ஒரே மகனான 22-வயதுள்ள முத்துகிருஷ்ணன் சிறிதுகாலமாய் இருமல் வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்து 23-5-46 இரவு முடிவெய்தியதானது ஈரோடு பொதுமக்களுக்கு பெரிதும் துக்கமான சம்பவமாகும். எல்லா பிரமுகர்களும், மற்ற மக்களும் வந்து துக்கம் விசாரித்தார்கள். நமது அனுதாபத்தை தோழர் சிக்கயநாயக்கருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

## தென் ஆற்காடு மாவட்ட திராவிட மாணவர் மாநாடு

30-5-46 வியாழனன்று கல்லக்குறிச்சியில் நடைபெறும்.

தலைவர்:- பெரியார் ஈ. வெ. ரா. திறப்பாளர்:- இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., கொடியேற்றுபவர்:- எ. பி. சனார்த்தனம் எம். ஏ.,

மற்றும் ஆ. திராவிடமணி பி. ஏ., இரா. இளம்வழுதி, அன்பழகன் எம். ஏ., தவமணிராசன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இயக்கத்தோழர்கள் கூடுமானவரை கறுப்புச்சட்டை அணிந்து வரவேண்டுகிறோம்.

வரவேற்புக் குழுவினர்.

## திருவண்ணாமலை டிவிஷன் திராவிடர் கழக முதலாவது மாநாடு

திருவண்ணாமலை சின்னக்கடைத் தெரு தோழர் அருணாசலமுதலியார் காலியிடத்தில் அமைத்திருக்கும் பன்னீர் செல்வம் பந்தலில், 2-6-46 ஞாயிறு அன்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும். இயக்கத் தோழர்கள் கலந்துகொள்வார்கள். அனைவரும் வருக. வரவேற்பு கட்டணம் ரூ 4. பிரதிநிதி கட்டணம் ரூ. 3. பார்வையாளர் கட்டணம் அணா 4. பெண்களுக்கு தனியிடமும் உண்டு. கட்டணம் கிடையாது. சாப்பாடு வசதியுண்டு.

காலையில் கறுஞ்சட்டைப்படை அணிவகுப்பும் மாலையில் பொதுக்கூட்டமும் உண்டு.

வரவேற்புக்கழகத்தினர்.

## 12வது வட்டம் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்

27-5-46 திங்கள் மாலை 6மணிக்கு பெத்துநாயக்கன்பேட்டை சிவஞானம் பார்க்கில், தோழர் எம். எஸ் எம். மொய்தீன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் அன்பழகன், ஜனார்த்தனம், ஆ. திராவிடமணி மற்றும் பலர் பேசுவர் அனைவரும் கறுப்புச்சட்டை அணிந்து வரவேணுமாய் செயலாளர் தோழர் கே. மூர்த்தி கேட்டுக்கொள்கிறார்.

## திருக்காட்டுப்பள்ளியில் பொதுக்கூட்டம்

17-5-46ல் திருக்காட்டுப்பள்ளியில் தோழர் சிங்காரவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அடங்கிய பொதுக் கூட்டத்தில் பெரியார் அவர்கள் 3மணி நேரம் உணர்ச்சிமிக்க விரிவுரையாற்றினார்கள். தோழர் அரங்கசாமி நன்றி கூறினார்.

## மாணவர் சுற்றுப்பிரயாணம்

★

### தஞ்சை மாவட்டம்

தோழர்கள்: சிறுவன் வீரமணி, புலவர் ஆறுமும், புலவர் குழந்தையா, தில்லை வில்லாளன் ஆகியோர்.

| | |
|---|---|
| 26-5-46 | வெங்கடங்கால் |
| 27— | திருமருகல் |
| 28— | ஓய்வு (நாகூர்) |
| 29— | கரைப்படகை (திருப்பூண்டி) |
| 30— | திருத்துறைப்பூண்டி |
| 31— | காலை பொன்னரை |
| | மாலை ஆலத்தம்பாடி |
| 1-6-46 | கள்ளுக்குடி |
| 2— | சங்கந்தி |
| 3— | தோலி |

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன். திருத்துறைப்பூண்டி வட்டக்கூட்டங்களில் அமைப்பாளர் தோழர் ஹாஜாபீர் உடனிருந்து உழைப்பார்.

வி. எஸ். பி. யாகூப்,
C/o ஹாஜாபீர், ஜவுளி வியாபாரம்,
திருத்துறைப்பூண்டி.

★

### தென்னாற்காடு மாவட்டம்

தோழர்கள் புலவர் மாணிக்கம், அவர்கள் தலைமையில் மதியழகன், முத்தையா, புலவர் நன்னன் ஆகியோர் பிரசாரஞ்செய்து வருகின்றனர். மதுரை இராமானுசமும், புலவர் குஞ்சிதபாதமும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

| | |
|---|---|
| 27-5-46 | காலை ஒரத்தூர் |
| | மாலை சேத்தியா தோப்பு |
| 28— | மாலை கீரைப்பாளையம் |
| | இரவு புவனகிரி |
| 29— | மாலை சிதம்பரம் |
| 30— | மாலை கொள்ளடம் |
| 31— | கூடலூர் O. T. |
| 1-6-46 | குறிஞ்சிப்பாடி |
| 2— | மாலை விருப்பாட்சி |
| | இரவு சோரக்குப்பம் |
| 3— | மாலை குள்ளஞ்சாவடி |

மற்ற ஊர்கள் விவரம் அடுத்த இதழில்.

---

### சென்னை சுயமரியாதை சங்கம்

29-5-46 புதன்கிழமை மாலை 6மணிக்கு நெ. 11, பொம்முசெட்டித்தெரு, பார்க்டவுனில் (சென்டிரல் ஸ்டேஷன் அருகில்) மேற்படி சங்க நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெறும். அங்கத்தினர்கள் தவறாதுவந்து, முக்கிய பல விஷயங்கள் ஆலோசனைக்கு வருவதால் கலந்துகொள்ளுமாறு பொதுக்காரியதரிசி தோழர் எம். எஸ். முத்து கேட்டுக்கொள்ளுகிறார்.

### பெயர் சூட்டல்

16-6-46 அன்று தாத்தையங்கார் பேட்டை தோழர் சுப்பிரமணியம் அவர்கள் குழந்தைக்கு பெரியார் அவர்கள் தலைமையில் "வீரமணி" என்ற பெயரிடப்பட்டது. ஒரு பெரிய ஊர்வலம் நடந்தேறிடு பொதுக்கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது.

### சென்னை ஜில்லா திராவிடர் பெடரேஷன்

2-6-46 ஞாயிறு காலை 9மணிக்கு பார்க்டவுன் நைனியப்பநாயக்கன் தெரு, போஸ்ட் ஆபீசுக்கடுத்த 14வது கட்டிடத்தில் தோழர் C. D. T. அரசு தலைமையில் டை சங்க அவசர நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். பல முக்கிய திட்டங்கள் ஆலோசனைக்கு வருவதால் நிர்வாக உறுப்பினர்கள்மட்டும் தவறாது வரவேண்டுகிறோம்.

என். வி. என். பொதுக்காரியதரிசி.

---

### மணமகன் தேவை

18வயதுடைய, கோனார் வகுப்பு, கன்னிப்பெண்ணிற்கு மணமகன்தேவை. மணமகன் கோனார் வகுப்பு, நாயுடு, முதலியார், பிள்ளை வகுப்புகளானாலும், மாதம் ரூ. 50-0-0 வருமானம் உள்ளவர்கள் ஸ்டாம்புடன் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மருத்துவர் வகுப்பு

22வயதுடைய விதவைப்பெண்ணிற்கு மருத்துவர் வகுப்பு, அல்லது முதலியார், நாயுடு, செட்டியார் வகுப்புகளில் மணமகன் தேவை. மாதம் ரூ. 50 வருமானம் உள்ளவர்கள் ஒன்னரையணா ஸ்டாம்புடன் எழுதவும்.

S. பார்வதி,
சிந்தாமணி கடைத்தெரு,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

### அறிவிப்பு

எனது உடல்நலக்குறைவால் பெறவேண்டி வ. ஆ. மாவட்ட ஆ... சர் பதவியை இராஜிநாமா செய்... தால் பொறுப்புள்ள தோழர்கள் ... திருவண்ணாமலையில் நடக்கும்... டிக்கூட்டத்திற்கு வந்து பொ... ஏற்று உழைக்குமாறு கேட்டுக்... றேன். வி. எம். இராசமாணி... திருப்...

o

2-6-46ல் திருவண்ணாமலையி... நடைபெறும் வ ஆ. மாவட்ட திராவி... சழகக் கமிட்டிக் கூட்டத்திற்கு எல்ல... கமிட்டி உறுப்பினர்களும் ஆண்டு சந்தா வுடன் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். வெங்கட்ராமன், தலைவர்.

### திருத்தம்

11-5-46 குடி அரசில் கழகம் அமைத்தார்கள் என்ற தலைப்பில் நீடாமங்கலம் என்பதற்குப்பதில் பழைய நீடாமங்கலம் எனத் திருத்திக்கொள்க. (ஆ-ர்)


### மாதம் ரூ. 40

★

சம்பளத்தில் ஏஜண்டுகள் தேவை.

டிப்பாசிட் ரூ. 50 அனுப்பி எழுதவும் டிப்பாசிட் இல்லாத கடிதங்கள் நிராகரிக்கப்படும்.

தாய்நாடு சேவிங்ஸ் பண்ட்,
நாங்குனேரி. P. O.

### பார்ப்பனப் படுமோச விளக்கம்

பழைய எட்டுச்சுவடியிலிருந்து பெரியார் அவர்கள் அனுமதியில் வெளிவருகிறது. தனிப்பிரதி தபால் செலவுடன் 0-3-9;
வியாபாரிகட்கு 25%கழிவு தருகிறோம்.

தன்மானத் தாலாட்டு

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், திருவத்திபுரம் மாவண்ணா தேவராசன் இயற்றியது. தனிப்பிரதி தபால் செலவுடன் 0-3-3; 12½ % கழிவு.

கருப்புச்சட்டை வழிநடைப்பாட்டு—அச்சில்

திருவத்திபுரம் மாவண்ணா தேவராசன் எழுதியது.

குறிப்பு:- வியாபாரிகள் நலன் குறித்து V. P. P. கிடையாது.

விவரங்களுக்கு:-
ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ. ஆ.

### ஜெயராம் காயசுத்தி லேகியம்

★



தலைவலி, மயக்கம், வாந்தி, பிடரிவலி நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், தீராத வயிற்றுவலி, இடுப்புவலி, இருமல், குடல்வாதம், கைகால் வலி, கிரிமிகளின் உபாதை, மூலநோய் முதலியவைகளை நீக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும் அற்புத மருந்து.

இரண்டே வேளையில் குணம் தெரியும்.

1சேர் ரூ. 4-0-0. ½-சேர் ரூ. 2-2-0.
V. P. P. வேறு.

தயாரிப்பவர்:-
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

ஸ்டாக்கிஸ்ட்:-
V. ஆறுமுகம் பிள்ளை,
ஷாப் வியாபாரம், பெரிய கடைவீதி, நீடாமங்கலம்.

# மாவட்டந்தோறும் மாணவர் பிரச்சாரம்

இவ்வாண்டு கோடை விடுமுறையில் ஈரோட்டில் பயிற்சிபெற்ற மாணவர்கள் பலர் மாவட்டந்தோறும் சென்று திராவிட இயக்கப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். மாணவர் பிரச்சார மாவட்ட அமைப்பாளர்களும் நல்ல ஊக்கத்தோடும், ஆர்வத்தோடும் கூட்டங்களை அமைத்து தருகின்றனர். சில மாவட்டங்களில் இரு பகுதிகளாகப் பிரித்து கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. சில நாட்களில் இருகூட்டங்கள் நடைபெறுகின்றன. மாணவர்களும் கொடுங்கானலையும் பொருட்படுத்தாது மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வி அருமையும் பாராது சொற்பொழிவாற்றி இயக்கக் கொள்கைகளை எங்கும் பரவச்செய்து வருகின்றனர். இயக்கத்திற்குப் பிரசாரகர்கள் அதிகமாக இல்லையே என்ற குறையையும் போக்கும் முறையில் பல மாணவர்கள் இவ்வாண்டு தயாராகியுள்ளது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இனியும் கூட்டம் நடத்த விரும்புவோர் இம்மாணவர்களை இன்னும் நடைபெறாத இடங்களில் கூட்டங்கள் நடத்த வேண்டுகிறேன்.

ஆங்காங்கு கூட்டங்கள்நடத்த துணை செய்தும், மாணவர்களை ஆதரித்து பேருதவி புரிந்துவரும் பெரியோர்களுக்கும், தோழர்களுக்கும் மாணவர்கள் சார்பிலும், பிரச்சார கழகச்சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

★

25-4-46 முதல் பல மாவட்டங்களிலும் நடைபெற்றுவரும் மாணவர் பிரச்சாரக் கூட்டங்களின் செய்திகள் இடமின்மையால் மிகச்சுருக்கமாகவே வெளியிடப்படுகிறது. மாணவர்களும் தோழர்களும் பொறுத்தருள்க. (ஆ-ர்)

★

## மதுரை மாவட்டம்

தோழர்கள் தவமணிராசன், கனகபாண்டியன், துரைராசன், இராவணபாண்டியன், எஸ். அப்பாவு, ஆர். செல்வன், இளங்கோவன், டேவீஸ், ஈ. வெ. கி. செல்வன், முனியாண்டி, என். பி. முத்திருளாண்டி முதலியோர் கலந்துகொண்டனர்.

26-4-46ல் மதுரை அழகரடியில் தோழர் தவமணிராசன் அவர்கள் தலைமையில்.

27-4-46ல் மதுரை சந்தைப்பேட்டையில் தோழர் முத்திருளாண்டி அவர்கள் தலைமையில்.

28-4-46ல் மதுரை கிஷ்ண்ராயர் தெப்பக்குளம் மைதானத்தில் தோழர் எட்வின் பெரியநாயகம் அவர்கள் தலைமையில்.

30-4-46ல் பட்டிவீரன் பட்டியில் வானொலி மைதானத்தில் தோழர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் தலைமையில்.

1-5-46ல் நிலக்கோட்டையில் தோழர் ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில்.

2-5-46ல் பாலமேட்டில் தோழர் எம். பழனிச்சாமி அவர்கள் தலைமையில்.

4-5-46ல் பழனியில் காமாட்சி தலைமையில்.

5-5-46ல் பழனியில் தோழர் சீனுவாசன் தலைமையில்.

★

## வடஆற்காடு முதற்பகுதி

தோழர்கள் ஆர். வி. வெங்கட்ராமன், க. திருமாறன், இரத்தினவேல், பூங்காவனம், செகதீசன், மாணிக்கம், இளங்கோவன், வடிவேல் முதலியோர்.

25-4-46ல் வ. ஆற்காடு திருப்பத்தூர் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் தோழர் பி. வடிவேல் அவர்கள் தலைமையில். இக்கூட்டத்தில் திராவிடர்கழக நிர்வாகக் குழு தலைவர் வழக்கறிஞர் டி. பி. வேதாசலம் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

28-4-46ல் திருப்பத்தூரில் தோழர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில்.

29-4-46ல் ஜோலார்பேட்டையில் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் தோழர் எம். நடேசன் அவர்கள் தலைமையில்.

30-4-46ல் நாட்டறம்பள்ளியில் ஆரம்பப்பள்ளி மைதானத்தில் தோழர் எம். பி. வடிவேல் அவர்கள் தலைமையில்.

1-5-46ல் வாணியம்பாடி பாலாற்றில் தோழர் எம். பி. வடிவேல் அவர்கள் தலைமையில்.

4-5-46ல் வடாற்காடு ஆரணியில் தர்மராசா கோயில் திடலில் வடாற்காடு மாவட்ட தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில்.

5-5-46ல் செய்யார் திருவத்தியூரில் தோழர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில்,

6-5-46ல் வந்தவாசியில் தோழர் ஆர். வெங்கட்ராமன் தலைமையில்.

75-4-6ல்ல் சேத்துப்பட்டில் தோழர் ஆர். வெங்கட்டராமன் தலைமையில்.

★

## வடஆற்காடு இரண்டாம் பகுதி

தோழர்கள் இராசமாணிக்கம், பாலசுந்தரம், மாவண்ணா தேவராசன், சா. கோவிந்தன், மா. நா. இராசமாணிக்கம் முதலியோர்.

1-5-46ல் திருவத்திபுரத்தில் தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில்.

2-5-46ல் திருவோத்தூர் சன்னதி தெருவில் தோழர் முத்துகிருஷ்ணன் அவர்கள் தலைமையில்.

3-5-46ல் வாழ்குடை கிராமத்தில் தோழர் மா. நா. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில்.

6-5-46 ஈஸ்வரபுரத்தில் நடைபெற்ற தமிழ்த் திருமணங்களில்.

7-4-46ல் சேத்துப்பட்டில் தோழர் வேதபுரி தலைமையில்.

8-5-46ல் புரிசை கிராமத்தில் தோழர் நாராயணசாமி தலைமையில்.

★

## தஞ்சை மாவட்டம்

தோழர்கள் வில்லாளன், சுப்பையன், புலவர் ஆறுமுகம், வெங்கட்ராமன், டி. கே. சீனுவாசன், இளங்கோ முதலியோர்.

25-4-46ல் பூதலூரில் புலவர் இளங்கோவன் அவர்கள் தலைமையில்.

26-4-46ல் கள்ளப்பெரம்பூரில் தோழர் பாலகுரு அவர்கள் தலைமையில்.

27-4-46 காலையில் வெண்ணெய்மங்கலத்தில் தோழர் வைத்தியநாதன் அவர்கள் தலைமையில்.

27-4-46 மாலையில் திருவையாற்றில் தஞ்சை தோழர் எஸ். ஆர். சுப்பண்ணா அவர்கள் தலைமையில்.

28-4-46ல் அரசூரில் புலவர் இளங்கோ தலைமையில்.

28-4-46 ஆலக்குடியில் திராவிடர் கழகத் திறப்புவிழாவில்.

29-4-46ல் கரந்தையில் தோழர் சுந்தரராசன் அவர்கள் தலைமையில்.

30-4-46ல் அய்யம்பேட்டையில் தோழர் இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில்.

1-5-46ல் தாராசுரத்தில் தோழர் இலக்குமிபதி பி. ஏ., அவர்கள் தலைமையில்.

2-5-46ல் திருச்சேறையில் தோழர் பழனிவேலு அவர்கள் தலைமையில்.

3-5-46ல் குடவாசலில் தோழர் செல்வத்தியாகராசன் அவர்கள் தலைமையில்.

5-5-46ல் சாக்கோட்டையில் தோழர் கே. எ. சீனிவாசம் அவர்கள் தலைமையில்.

6-5-46ல் திருநாகேசுவரத்தில் நடைபெற்ற கூட்டத்தில்.

7-5-46ல் செம்பனார்கோவில் திராவிட கழகத் திறப்புவிழா வழக்கறிஞர் வெங்கடாசலம் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில்.

8-5-46ல் குற்றாலத்தில் திராவிடக் கழகத் திறப்புவிழா தோழர் வெ. சண்முகம் அவர்கள் தலைமையில்.

9-5-46ல் சோழம்பேட்டையில் தோழர் மாயவரம் இராசமாணிக்கம் தலைமையில்.

10-5-43ல் மாயவரம் டவுன் ஸ்டேஷனுக்கு அருகில் தோழர் சாமிநாதன் தலைமையில்.

11-5-46ல் கொல்லுமாங்குடியில் தோழர் நா. பக்கிரிசாமி தலைமையில்.

12-5-46ல் சன்னாநல்லூரில் தோழர் முத்து தலைமையில்.

13-5-46ல் கங்களாஞ்சேரியில் தோழர் வாசுதேவன் தலைமையில்.

★

## கோவை மாவட்டம்

தோழர்கள் இராவணன், இரா. இளங்கோவன், இளஞ்சேரன், பாலகுரு முதலியோர். சில கூட்டங்களில் தோழர்கள் மதியழகன், இரா. நெடுஞ்செழியன், கோபி ராசு முதலியோரும் கலந்துகொண்டனர்.

25-4-46ல் ஈரோடு பெரிய அக்ராகாரத்தில் தோழர் நாராயணசாமி அவர்கள் தலைமையில்.

26-4-46ல் பவானியில் தோழர் பாலகுரு அவர்கள் தலைமையில்:

27-4-46ல் ஜம்பையில் ஜம்பை மிராசுதார் அவர்கள் தலைமையில்.

28-4-46ல் கோபிசெட்டிபாளையத்தில் தோழர் ராசு அவர்கள் தலைமையில்.

29-4-46ல் சத்தியமங்கலத்தில் தோழர் ராசு அவர்கள் தலைமையில்.

1-5-46ல் கோவை காந்தி பார்க்கில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் மேதின விழாவில்.

3-5-46ல் இருகூரில் தோழர் ராஜகோபால் அவர்கள் தலைமையில்.

4-5-46ல் சூலூரில் திருப்பூர் மொஹைதீன் அவர்கள் தலைமையில்.

5-5-46ல் குணியமுத்தூரில் ஆசிரியர் முத்து அவர்கள் தலைமையில்.

6-5-46ல் புளியகுளத்தில் ஆசிரியர் குருசாமி அவர்கள் தலைமையில்.

7-5-46ல் பாப்பாாயக்கன் பாளையத்தில் தோழர் இராமசாமி அவர்கள் தலைமையில்.

☆

## இராமநாதபுரம் மாவட்டம்

தோழர்கள் சி. செங்குட்டுவன், கே. ஆர். பாண்டியன், பி. எஸ். முத்தையன், முதலியோர்:

26-4-46ல் அருப்புக்கோட்டையில் தேர்முட்டி மைதானத்தில் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் தலைமையில்.

27-4-46ல் அருப்புக்கோட்டையில் தியாகராய வாலிபர் சங்கத்தின் முன்னுள்ள இடலில்.

28-4-46ல் விருதுநகரில் தோழர் முருகையா அவர்கள் தலைமையில்.

29-4-46ல் திருத்தங்கலில் தோழர் முத்தையா அவர்கள் தலைமையில்:

1-5-46 ஏழாயிரம் பண்ணியில் தோழர் அந்தோணி தலைமையில்.

2-5-46 இருக்கும்கொடியில் தோழர் சுவிசேஷமுத்து தலைமையில்.

3-5-46 நல்லான்செட்டி பட்டியில் தோழர் "எ. எஸ். தங்கவேல் வாசகசாலை" ஆரம்பவிழா.

4-5-46 செட்டுடையான்பட்டியில் தோழர் முத்து இருளன் தலைமையில்.

5-5-46 சாத்தூர் செல்வம் பொட்டலில் தோழர் சின்னப்பன் தலைமையில்.

☆

## திருநெல்வேலி மாவட்டம்

தோழர்கள் கே. என். தமிழரசன், கே. வி. கே. சாமி, மீரா, இரா. இளம்வழுதி, தங்கப்பழம் முதலியோர்:

26-4-46ல் தூத்துக்குடியில் தோழர் ஆறுமுகம் அவர்கள் தலைமையில்.

27-4-46ல் தூத்துக்குடியில் தோழர் இரா. இளம்வழுதி அவர்கள் தலைமையில்.

28-4-46ல் தூத்துக்குடியில் தோழர் பி. எஸ். சண்முகம் அவர்கள் தலைமையில்.

29-4-46ம் எட்டயபுரத்தில் தோழர் கலிங்கன் அவர்கள் தலைமையில்.

30-4-46ல் கீழ்ஈறாலில் தோழர் செல்லையா அவர்கள் தலைமையில்.

☆

## சேலம் மாவட்டம்

தோழர்கள் இளங்கண்ணன், அபிபுல்லா, துரைராசு, தா. கு. சுப்ரமண்யம், அண்ணாவி, நாவலடி முதலியோர்:

25-4-46ல் நன்னிபாளையத்தில் தோழர் கருப்பண்ணன் அவர்கள் தலைமையில்.

26-4-46ல் சேந்தமங்கலத்தில்.

29-4-46ல் வேலூர் பந்தடும் மைதானத்தில் தவுட்டுப்பாளையம் தோழர் கணபதி அவர்கள் தலைமையில்.

30-4-46ல் பொத்தனூர் மாரியம்மன் கோயில் எதிரில் பாண்டமங்கலம் தோழர் சி. அண்ணாவி அவர்கள் தலைமையில்.

1-5-46ல் பாண்டமங்கலம் செந்தமிழ் நிலையத்திற்கு எதிரியில் பொத்தனூர் தோழர் செ. அ. மணிவாசகம் அவர்கள் தலைமையில்.

3-5-46ல் திருச்செங்கோட்டில் தோழர் கே. பரமசிவம் அவர்கள் தலைமையில்.

## வடசென்னை திராவிடர் மாநாடு

வடசென்னை திராவிடர் மாநாடு 28-4-46 காலை தலைவர்கள் ஊர்வலத்திற்குப்பின் 9-மணிக்கு கல்மண்டபம் போலீஸ் ஸ்டேஷன் அடுத்த தியாகராயர் பந்தலில் நடைபெற்றது.

வரவேற்புத் தலைவர் எம். கே. டி. சுப்பிரமண்யம், யாவரையும் வரவேற்று மாநாட்டின் நோக்கங்களை விளக்கினார். தோழர் என். வி. நடராசன், திராவிடர் இயக்கக்கொடியை ஏற்றுவித்து, திராவிடநாடு பிரிக்கப்படவேண்டிய அவசியத்தை விளக்கினார்.

குடந்தை தோழர் எஸ். கே. சாமி, மாநாட்டைத் திறந்துவைத்து வடநாட்டவர் ஆதிக்கத்தையும் ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்கத்தையும் சமுதாய இழிவையும் நீக்கவேண்டியதைப்பற்றி சொற்பொழிவாற்றினார். தோழர் என். ஜீவரத்தினம் மாநாட்டுக்குத் தலைமை வகித்து காங்கரசின் தற்கால விபரீதப் போக்கையும், திராவிடர் அனைவரும் இனஉணர்ச்சி அடையவேண்டுவது பற்றியும் குறிப்பிட்டு விளக்கமாகப் பேசினார்.

பின்னர் தலைவர் பெரியார், தோழர்கள் சாரங்கபாணி (ஆசிரியர் தமிழ்முரசு சிங்கப்பூர்), எ. பி. ஜனார்த்தனம் மற்றும் பலர் பேசினர்.

திராவிடநாடு பிரிக்கப்படவேண்டுமென்றும், அம்பேத்கார் பிறந்ததின விழாவில் காங்கரஸ் காலிகளால் தாக்குண்டு உயிர்நீத்த தோழர் கெங்காதரனுக்கு அனுதாபங் காட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப்பின், வணக்கங்கூற மாநாடு பகல் 1-30 மணிக்கு முடிவுற்றது.

ஊர்வலம்—பொதுக்கூட்டம்

பிற்பகல் 4மணிக்கு ராபின்சன் பார்க்கிலிருந்து புறப்பட்டு மாபெரும் கறுஞ்சட்டைப்படை ஊர்வலம் தலைவர்களுடன் பல தெருக்களின் வழியாய், தண்டையார்பேட்டை வந்து சேர்ந்தது. மாலை 6மணிக்கு தோழர் பெரியசாமி தலைமையில் மாபெருங்கூட்டம் நடைபெற்றது. தலைவர் பெரியார் அவர்கள் சுமார் இரண்டு மணிநேரம் அரசியல் சமுதாய இழிவுகளைப் பற்றியும், திராவிடநாடு திராவிடருக்கே ஆக திராவிட மக்கள் செய்யவேண்டிய பெருந் தொண்டையும் விளக்கிப் பேசினார்கள். பின்னர் தோழர் ஜீவரத்தினம், எஸ். ஆர். சாண்டோ பேசியபின் கூட்டம் முடிவுற்றது. இம்மாநாட்டின் காரணமாக வடசென்னைப் பகுதியில் பல காங்கரஸ் தோழர்களிடையே மனமாற்றம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

---

## தீ மிதித்தோருக்கு மோட்சம்

நாகை கோட்டூர் கிராமத்தில்8-4-46ந் தேதி நடந்த மாரியம்மன் தீமிதி திருவிழாவில் ஐந்து பேர் தீயில் விழுந்து படுகாயப்பட்டு இருவர் உயிரிழந்தனர். ஆஸ்திக அன்பர்கள் கைமேல் மோட்சம் கிடைத்ததாகக்கூறிச் சாந்தியடைவர். சர்க்கார் கொடுஞ்செயல் எனக்கூறி 144 தடையுத்திரவு போட்டுள்ளது. இத்தகைய மத மூடநம்பிக்கைகள் அடியோடு ஒழியவேண்டுமென பகுத்தறிவு உலகம் பாடுபடுகிறது.

## ஆதிதிராவிட மாநாடு

பொன்னேரி தாலுக்கா பட்டமந்தா[illegible]யில் செங்கற்பட்டு ஜில்லாபோர்டு தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் பட்டமந்தரி ஆதிதிராவிட மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் சி. தங்கராசு அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார். பொன்னேரி தோழர் ஆர். சுப்ரமண்யம் அவர்கள் பெரியார் ஈ. வெ. ரா. படத்தைத் திறந்து வைத்தார். தோழர் எம். சி. இலட்சுமணன் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் படத்தை திறந்துவைத்தார். தோழர்கள் பி. ஆர். திருவேங்கிடம், பி. எஸ். மணி, என். எஸ். தங்கரூபன், எஸ். இ. சுப்ரமண்யம், சி. எல். மூத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திருச்சி திராவிட மருத்துவர் கழகம்

29-4-46ல் திருச்சி வாகனர் மேட்டுத்தெரு சித்த வைத்தியசாலையில் தோழர் க. பிச்சைமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற கமிட்டிக்கூட்டத்தில் திருச்சி ஜில்லா மருத்துவர் சங்கத்தை திராவிட மருத்துவர் கழகம் என அமைத்து மாகாண திராவிட மருத்துவர் கழகமும் நிறுவினார்கள்

## நினைவுநாள்

செங்கல்பட்டு புலி இராசகோபால் மனைவி 27-5-44ல் இயற்கையெய்திய 2வது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு குடி அரசு வளர்ச்சிக்காக ரூ. 5 நன்கொடையளிக்கப்பட்டது. அன்னார் குடும்பத்தில் சுபம் அசுபம் ஆகிய எல்லாக் காரியங்களும் எவ்வித மூடச்சடங்குமின்றியே நடைபெறுகின்றன. வயது 67 ஆகியும் ஓர் சீர்திருத்த இளைஞராகவே புலி இராசகோபால் விளங்குகிறார்.

## சித்தூர் மாவட்டத்தில் திராவிடர் கழகம்

19-4-46ல் சித்தூர் ஜில்லா பொதட்டூர் பேட்டையில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு தோழர் இ. எ. குப்புசாமி தலைவராகவும், எ. என். கன்னியப்பன் துணைத்தலைவராகவும், இ.எஸ். சுப்ரமணியம் செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.


## பரிசு ரூ. 500

லக்கி காம்பெட்டிஷன்–1

முடிவு தேதி 3-6-46

2முதல் 20வரையில் நீங்கள் எண்ணுகிற நம்பரை தனிக் காகிதத்தில் எழுதி கூப்பன் ஒன்றுக்கு பிரவேச கட்டணம் அணா 8 வீதம் அனுப்புக. எத்தனையும் போடலாம். முந்துங்கள்.

"நந்தி" ஆபீஸ்,
73 சுவாமி சன்னதி,
திருநெல்வேலி டவுன்.


Edite, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.